GNANA BHAKTAMITRAN
Pastor and Evangelist
Evangelical Bible Assembly
Madurai, India







# இயேசுவில் இளைப்பாறுதல்

இந்த உலகம் விசுவாசிகளுக்கு சொந்த தேசம் அல்ல. அது சொந்ததேசமாக இல்லாததின் காரணமாகத்தான் அவர்கள் இந்த உலகத்திலே கஷ்டங்களையும் துன்பங்களையும் உபத்திரவங்களையும் அனுபவிக்க நேரிடுகிறது. சிலசமயங்களிலே அவர்களுடைய ஆவியிலே மிகவும் கலக்கமடையக்கூடிய நிலமையைக்கூட அடைந்துவிடுகிறார்கள். அந்த நிலைமையை அவர்கள் தவிர்க்கப் பிரயாசைப்பட வேண்டும். அவர்கள் விசுவாசிகளாக இருப்பதினால், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் அன்பான பராமரிப்புக்குள் தஞ்சமடையக்கூடிய அனுகூலம் அவர்களுக்கு இருக்கிறது. ஆனாலும் மிகவும் கலக்கமான வேளைகளில் அவர்கள் இந்த அனுகூலத்தை மறந்துவிட்டு, அநாவசியமாக கலங்கித் தவிக்கிறார்கள்.

அப்படியாக கர்த்தரிடம் தஞ்சம் அடையவேண்டுமானால், முதலாவதாக அந்த விசுவாசி கர்த்தரோடு ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த தொடர்பை அவர்கள் வசனத்தின் மூலமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கர்த்தருடைய வசனம் உயிருள்ளதும், மிகவும் சக்தி வாய்ந்ததுமாகும்.

அடுத்தபடியாக அவன் நினைவில் வைக்க வேண்டியது, கர்த்தரால் கிருபையாக அளிக்கப்பட்டிருக்கும் பரிசுத்த ஆவியாகும். கர்த்தர், அவனுக்கு பரிசுத்தஆவியைக் கொடுத்திருப்பதின் முக்கியமான காரணம், அவனுடைய எல்லாவிதமான ஆவிக்குரிய தேவைகளிலும் அவனை வழிநடத்துவதற்காகவேயாகும். ஆகவே ஒரு விசுவாசி எந்த சந்தர்ப்பத்திலும், சூழ்நிலையிலும், எக்காரணத்திற்காகவும் தனக்கு எந்த உதவியுமே இல்லாமல், தான் நிராதரவாக இருப்பதாக நினைக்க வேண்டியதில்லை.

தனக்கு அளிக்கப்பட்டிருக்கும் பரிசுத்தஆவியை இப்பேர்பட்ட சந்தர்ப்பங்களில் உபயோகிக்க நினைக்கின்ற விசுவாசிக்கு, அந்த பரிசுத்தஆவி, அந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, அவனுக்குத் தேவையான வசனங்களை கவனிக்கும்படியாக அவனைத் தூண்டும். அதுமாத்திரமல்ல, அவனுடைய வளர்ச்சிக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற சபையை நோக்கியும் அவனுடைய கவனத்தைத் திருப்பும்.

கர்த்தரிடம் தஞ்சமடைய அல்லது அவரிடம் இளைப்பாறுதல் பெற இன்னொரு படி, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன் என்று மனதில் தீர்மானம் செய்து கொள்ளுதல்.

அப்போது விசுவாசிக்கு தனக்கு முன்பாக இருக்கும் மகிமையான எதிர்காலம் தெளிவாகத் தெரியும். தான் ஒருபோதும் கைவிடப்படவில்லை என்பதை அப்போது அவன் உணருவான். உலகத்தில் என்னதான் போராட்டங்கள் இருந்தாலும், பரலோகராஜ்ஜியத்தில் தனக்கு ஒரு இடம் உண்டு என்கிற நிச்சயம் அவனுடைய இருதயத்தை நிரப்புவதால், எப்பேர்பட்ட கடினமான வாழ்க்கையையும் நம்பிக்கையோடும், உற்சாகத்தோடும், வெற்றிகரமாகவும் சந்திக்க வைக்கும்.

விசுவாசியின் ஆத்துமா, கர்த்தருடைய வசனத்தின் மீது பசியும் தாகமுமாயிருக்கிறது. அந்த ஆவல் நிச்சயமாக பூர்த்தி செய்யப்படும். அப்படி பூர்த்தி செய்யப்படுகையில் அவனுடைய இருதயம் நன்றியால் நிரம்பி வழியும். அந்த நன்றி, வேதத்திலே கூறப்பட்டிருக்கிற கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை யாருக்காவது கூறி அவர்களைக் கடவுளின் வழியில் திருப்ப வேண்டும் என்கிற ஆர்வத்தை அவனுக்குள் ஏற்படுத்தும். சுவிசேஷத்தை யாரிடமாவது பகிர்ந்து கொள்ள நல்லதொரு சந்தர்ப்பத்தை நோக்கி காத்திருப்பதில், உண்மையான நன்றி வெளிப்படும்.

அதேசமயத்தில் அவனுடைய ஆத்துமா, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவில் இளைப்பாறுதல் அடைந்து, உலகப்பிரகாரமான கஷ்டங்களையும், ஏமாற்றங்களையும், சோர்வுகளையும் மறந்துவிடும். திருப்தியும் சமாதானமும் அவனுடைய இருதயத்தை நிரப்பும். இயேசுவில் இளைப்பாறுதல் என்பதின் சாரம்சம் இவைதான்.

இந்த விஷயத்தில் மேலும் விளக்கம் தேவையென்றால் விசுவாசிகளுக்கு சபை உதவி செய்யலாம்.

Jesus, I am resting, resting
In the joy of what Thou art;
I am finding out the greatness
Of Thy loving heart.

Thou hast bid me gaze upon Thee,
And Thy beauty fills my soul,
For by Thy transforming power
Thou hast made me whole.

(Jeans Piggott, 1876, Jeans Mountain , 1876)

*இதை தமிழில் நான் மொழிபெயர்த்தது, 98ம் பாடலாக நமது பாடல் புத்தகத்தில் இருக்கிறது*

*இயேசுவில் நான் இளைப்பாறி ஆத்துமத்தில் பூரிப்பேன்*
*அவர் அன்பின் ஆழமதை என்னென்று சொல்வேன்!*

உம்மை முழுவதும் நம்பி உம்மை நோக்கிப் பார்க்கிறேன்
உமது அன்போ தெளிவும் சுத்தமுமாமே
உள்ளம் ஆத்துமாவில் நானும் ஆறுதலும் படுகின்றேன்
என் குறை கவலை யாவும் மறந்தே போனேன்

# கேள்விகள்

1. எதனால் விசுவாசிகள் இவ்வுலகில் கஷ்டங்களை சந்திக்க நேரிடுகிறது?

2. அவிசுவாசிகளுக்கு கஷ்டங்கள் இல்லையா? அப்படியிருந்தால், அவைகளுக்குள்ள வித்தியாசங்கள் யாவை?

3. விசுவாசிகளுக்கு இருக்கும் வசதி யாது?

4. அவைகளில் மிகவும் முக்கியமான அனுகூலம் என்ன?

5. இத்தகைய அனுகூலங்கள் அவர்களுக்கு எந்தெந்த விதங்களில் உபயோகமாயிருக்கிறது என்பதை வரிசையாக குறிப்பிடவும்.

6. அவைகளில் மிகவும் முக்கியமான உபயோகம் என்ன?

7. ஒரு விசுவாசியின் ஆத்துமா(யோவா 4:23ன்படி சொல்வதானால் 'ஆவி') அவனிடம் எப்போதிருந்து செயல்பட ஆரம்பிக்கிறது எவ்விதத்தில் செயல்படுகிறது?

8. விசுவாசி எவ்வகையில் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்கிறான்?

9. இயேசுவில் இளைப்பாறுதலை ஒரு விசுவாசி அடைவதற்கு சபை எந்த விதத்தில் உதவுகிறது?

10. இளைப்பாறுதல் என்றால் என்ன என்பதை உணர்ந்திருக்கிறீர்களா? அதை அனுபவித்திருக்கிறீர்களா?

11. "இயேசுவில் நான் இளைப்பாறி" என்கிற பாட்டில் நீங்கள் மிகவும் விரும்புகிற ஒரு கருத்தைக் கூறுங்கள். எதனால் அந்த கருத்தை விரும்புகிறீர்கள் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.